# வலயக்கல்விஅலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப்பரீட்சை– 2017

| தரம் - 07 | சைவநெறி | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் :- ..............................

### பகுதி – I

❖ மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01) காரியங்கள் சித்திப்பதற்கு முதலில் வழிபட வேண்டிய தெய்வம்.
1. சிவபெருமான் 2. முருகன் 3. விநாயகர் 4. விஷ்ணு

02) திருவானைக்காவில் வாழ்ந்த முதாட்டி செய்து வந்த தொண்டு.
1. சிவனடியார்களுக்கு உணவு கொடுத்தல்.
2. நந்திவனம் அமைத்தல்
3. ஆலயத்தை கூட்டுதல்
4. தினமும் பூமாலை கட்டிக் கொடுத்தல்

03) பாடசாலையில் நடைபெறும் சமய நிகழ்வுகளுள் ஒன்று.
1. பரிசளிப்பு விழா 2. ஆசிரியர்தினவிழா 3. நவராத்திரி விழா 4. முத்தமிழ்விழா

04) பாடசாலையில் கற்றுக்கொள்ளும் ஒழுக்கங்களினால் நாம்.
1. இறைவனை அடையலாம் 2. நற்பிரஜையாகலாம்
3. தீயவராகலாம் 4. உத்தியோகம் பெறலாம்

05) "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பதன் மூலம் கூறப்படும் வாழ்வியல் நற்பண்பு.
1. பணிவு 2. நீதி,நேர்மை 3. நன்றிமறவாமை 4. உண்மை

06) "பணியுமாம் என்றும் பெருமை........." என்று கூறியவர்.
1. திருவள்ளுவர் 2. விபுலானந்தர் 3. பாரதியார் 4. ஆறுமுகநாவலர்

07) புதுமனைப் புகுநாளில் நடைபெறும் நிகழ்வுகளில் ஒன்று.
1. விருந்தோம்பல் 2. கொலுவைத்தல் 3. ஏடுதொடக்கல் 4. ஆரவாரித்தல்

08) வெள்ளிக்கழமை விரங்களுள் சிறப்பானது.
1. கார்த்திகை வெள்ளி 2. புரட்டாதி வெள்ளி
3. ஐப்பசி வெள்ளி 4. மார்கழி வெள்ளி

09) பண்டிகைகளில் அடங்காதது.
1. சித்திரைப் புதுவருடப்பிறப்பு 2. தைப்பொங்கல்
3. தீபாவளி 4. தைப்பூசம்

10) புனிதவதியார் எனும் இளமைப்பெயர் கொண்டவர்.
1. மங்கையர்க்கரசியார் 2. திலகவதியார்
3. இசைஞானியார் 4. காரைக்கால் அம்மையார்



kalvi.lk

11) திருமுறைகளைத் தொகுத்தவர்
1. இராஜராஜசோழன் 2. நம்பியாண்டார் நம்பி
3. சிவபாதசேகரன் 4. சேக்கிழார்

12) திருமூலரால் பாடப்பட்டது
1. திருக்குறள் 2. திருவாசகம் 3. திருமந்திரம் 4. திருப்பல்லாண்டு

13) பஞ்சபுராணம் ஓதும் போது மூன்றாவது ஓதப்படுவது.
1. திருவிசைப்பா 2. தேவாரம் 3. பெரியபுராணம் 4. திருப்பல்லாண்டு

14) தேர் வடிவமாகச் சக்கரங்களோடு அமைக்கப்பட்ட திருக்கோயில்
1. திருவையாறு 2. மேலைக்கடம்பூர் 3. திருக்கோணேச்சரம் 4. சிதம்பரம்

15) சங்கினைப் படையாகக் கொண்ட கடவுள்.
1. நடராஜர் 2. முருகன் 3. ஐயானார் 4. விஷ்ணு

16) தூலலிங்கம் எனப்படுவது.
1. விமானம் 2. மூலவர் 3. கோபுரம் 4. பலிபீடம்

17) "என் கடன் பணி செய்து கிடப்பதே" என வாழ்ந்து காட்டியவர்.
1. திருஞானசம்பந்தர் 2. திருநாவுக்கரசர்
3. சுந்தரமூர்த்திநாயனார் 4. மாணிக்கவாசக சுவாமிகள்

18) மாணிக்கவாசகரின் குருபூசை தினம்.
1. சித்திரைச்சதயம் 2. வைகாசிமூலம் 3. ஆடிச்சுவாதி 4. ஆனிமகம்

19) பிரித்தானிய அரசினால் "நைட்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.
1. சேர்.பொன்.இராமநாதன் 2. ஸ்ரீலஸ்ரீஆறுமுக நாவலர்
3. சேர்.பொன். அருணாசலம் 4. இந்துபோர்ட் சு. இராசரத்தினம்

20) இலங்கையில் தேவாரம் பாடப்பட்ட தலம்.
1. திருக்கேதீஸ்வரம் 2. செல்வச்சந்நிதி 3. முன்னேச்சரம் 4. கதிர்காமம்

[20x2=40 புள்ளிகள்]



kalvi.lk

## பகுதி – II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதிப் பாடியவர் பெயர், தலம் என்பவற்றையும் தருக.
    1. "நத்தார் படை ஞானன்பசு ..............."
    2. "அம்மையே அப்பா ஒப்பிலா.........."
    3. "முத்திநெறியறியாத மூர்க்கரொடு........."
    4. "வேதநெறி தழைத்தோங்க........" [6+1+1x2=16 புள்ளிகள் ]

2. "சமய ஒழுக்கங்களையும் சமயப் பாரம்பரியங்களையும் கற்றுக் கொடுக்கும் இடம் பாடசாலை"
    1. பாடசாலையில் கொண்டாடப்படும் சமயவிழுமியங்கள் இரண்டு தருக.
    2. திருச்சிற்றம்பலம் சொல்லப்படும் இரண்டு சந்தர்ப்பங்களையும் குறிப்பிடுக.
    3. பாடசாலையில் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் நான்கு தருக.
    4. பாடசாலையில் சமய விழாக்களைக் கொண்டாடுவதால் நீர் அடையக்கூடிய நன்மைகள் நான்கு எழுதுக. [2+3+3+3=11 புள்ளிகள் ]

3. "விரதங்களுக்கு பண்டிகைகளும் மனிதவழ்வை நெறிப்படுத்துகின்றன.".
    1. "விரதம்" என்பதற்கு ஆறுமுகநாவலர் குறிப்பிடும் கருத்தினை எழுதுக.
    2. தைப்பூச தினத்தில் மேற்கொள்ளப்படும் சுபகருமங்கள் இரண்டு எழுதுக.
    3. நீர் அனுட்டித்த விரதம் ஒன்றினைக் குறிப்பிட்டு, அதனை எவ்வாறு அனுட்டித்தீர் எனவும் எழுதுக.
    4. பண்டிகைகளைக் கொண்டாடுவதன் மூலம் நாம் வளர்த்துக் கொள்ளக்கூடிய நற்பண்புகள் மூன்று எழுதுக.

    [2+3+3+3=11 புள்ளிகள் ]

4. "இறையருள் பெற்றவர்கள் நாயன்மார்கள்".
    1. சமய குரவர்கள் நால்வரையும் குறிப்பிடுக.
    2. திருஞானசம்பந்தர் ஆற்றிய அற்புதங்கள் மூன்று தருக.
    3. உழவாரப் படையாளி எனப்படுபவர் யார்? அவர் முத்தி அடைந்த தினம் யாது? இவரை இறைவன் எவ்வாறு ஆட்கொண்டார்?
    4. மாணிக்கவாசகர் பாடியருளிய நூல்கள் இரண்டு தருக. அவருடைய வேறுபெயர் ஒன்று தருக. [2+3+3+3=11 புள்ளிகள் ]

5. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"
    1. ஆலயம் என்பதன் பொருளை எழுதுக.
    2. ஆலய வழிபாட்டிற்கு செல்லும் போது எவ்வாறு செல்லல் வேண்டும்?
    3. ஆலய வழிபாட்டிற்கு கொண்டு செல்லும் பொருட்கள் எழுதுக.
    4. ஆலய வழிபாட்டினால் அடையும் நன்மைகள் மூன்று எழுதுக.

    [2+3+3+3=11 புள்ளிகள் ]

6. "தினமும் திருமுறை ஓதுவாய் மனமே"
    1. முதல் ஏழு திருமுறைகளையும் எவ்வாறு அழைப்பார்.
    2. திருமுறை என்பதன் பொருள் யாது?
    3. திருமுறையின் சிறப்புகள் மூன்று எழுதுக.
    4. திருமுறை ஓதுவதால் நீர் பெறும் பயன்கள் மூன்று எழுதுக.

    [2+3+3+3=11 புள்ளிகள் ]

7. "இறவாத இன்ப அன்பு வேண்டும்....."
    1. காரைக்கால் அம்மையார் எனப்பெயர்வரக் காரணம் யாது?
    2. காரைக்கால் அம்மையாரிடம் காணப்பட்ட சிறந்த நற்பண்புகள் மூன்று எழுதுக.
    3. காரைக்கால் அம்மையார் பாடிய நூல்கள் எவை?
    4. காரைக்கால் அம்யையார் இறைவனிடம் வேண்டிப்பெற்ற வடிவம் யாது? அதனால் பெற்ற பயன் யாது?

    [2+3+3+3=11 புள்ளிகள் ]


kalvi.lk

## தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |


Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457